இஸ்கான் ஸ்தாபக ஆச்சாரியர்

தெய்வத்திரு.அ.ச.பக்திவேதாந்த சுவாமி

# பிரபுபாதா



**கிருஷ்ணரின் மிகச் சிறந்த தூய பக்தர்**



பக்தர்கள் எப்போதும் என் இதயத்தில் இருக்கின்றனர். நான் எப்போதும் அவர்கள் இதயத்திலே இருக்கின்றேன். பக்தனுக்கு எனக்கு அப்பால் ஒன்றும் தெரியாது. நானும் என் பக்தனை மறக்க முடியாது.

– பகவான் ஸ்ரீகிருஷ்ணர்

(ஸ்ரீமத் பாகவதம் 9.4.68)

# " பிரபுபாதா "

## கிருஷ்ணரின் மிகச் சிறந்த தூய பக்தர்

பேபரன் பேத்திகளுடன் ஈஸி சேரில் படுத்து ஓய்வெடுக்க வேண்டிய வயதில் உலகையே கிருஷ்ண பக்தியின் கீழ் கொண்டு வந்த மஹான்.

கடவுளே இல்லை என்று பேசும் கலியுகத்தில், மனிதனையே கடவுளாக்கும் மதி குறைந்தோரிடத்தில், கடவுள் இருக்கிறார். அவர் இப்படி தான் இருப்பார் என்ற சாஸ்திரங்களின் கூற்றை விஞ்ஞானப் பூர்வமாக ஆணித்தரமாக எடுத்துரைத்த ஆன்மீக அறிஞர்.

எல்லாவற்றிற்கும் மேலாக - கிருஷ்ணரின் மிகச் சிறந்த தூய பக்தர்.

அவர் - காட்டிய வழி, நடந்த பாதை, வாழ்ந்த வாழ்வு - இவையெல்லாம் மக்களின் இதயங்களில் பகவான் 'ஸ்ரீகிருஷ்ணரை' நீங்கா இடம் பெறச் செய்கிறது.

இதோ அவர் நடந்த பாதையிலிருந்து சில . . .

" அனைத்து விதமான நற்குணங்களை அணிகலன்களாக பெற்று, நல் ஒழுக்கத்துடன் நன்கு பழகும், எப்போதும் சம நிலையிலும் அமைதியாக இருக்கும் கிருஷ்ணரின் தூய பக்தர்கள் எங்கிருந்தாலும், எப்பொழுது இருந்தாலும், அவ்விடமும், அங்குள்ள வம்சங்களும், எவ்வளவு களங்கம் உடையதாக இருந்தாலும் கூட தூய்மை அடைகின்றன.

- ஸ்ரீமத் பாகவதம் 7.10.19 "



# அபய் என்றழைக்கப்பட்ட பிரபுபாதா

'பிரபுபாதா' என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்படும் தெய்வத்திரு. அ.ச. பக்தி வேதாந்த ஸ்வாமி பிரபுபாதா அவர்கள் நம் இந்திய மண்ணின் கல்கத்தாவில் 1896 செப்டம்பர் 1ல் பிறந்தார்.

அப்போது அவருக்கு தாய் தந்தையர் இட்ட பெயர் 'அபய் சரண்தே'. அதாவது ''கிருஷ்ணரை சரணடைந்தவர்'' என்பது இந்த பெயரின் பொருள்.

பெயருக்கேற்றார் போல் இவரது தந்தை கௌர்மோகனும் கிருஷ்ணரை சரணடைந் திருக்கும் வண்ணம் அபயுக்கு கிருஷ்ண பக்தியை ஊட்டி வளர்த்தார்.

தன் மகன் அபய் (பிரபுபாதா) நடக்க கற்றுக் கொள்வதற்கு முன்னமே அருகிலுள்ள ராதா கிருஷ்ணர் கோயிலுக்கு தினமும் அழைத்துப் போவார். குழந்தை அபயுடன் ராதா கோவிந்தா முன் நின்று மணிக்கணக்கில் தோத்திரம் செய்வார் கௌர் மோகன்.



சிறுவயதிலேயே கிருஷ்ணரை பூஜிக்கும் அபய். (பிரபுபாதா)

சற்று வளர்ந்த அபயும், தனக்கென்று கிருஷ்ணர் விக்ரஹங்களை வாங்கித் தரச் செய்து நாள் தவறாமல் பூஜித்தார். தான் எது சாப்பிடுவதாக இருந்தாலும் முதலில் தன் கிருஷ்ணருக்கு நைவேத்யம் செய்து விட்டே சாப்பிட்டார்.

ஒரு முறை நண்பர்களுடன் கூடி கிருஷ்ணராகிய ஜகன்னாதரின் ரத யாத்திரையை நடத்தினார். அக்கம்பக்கத்து வீடுகளுக்கு

> "'அபய் சரண்தே' என்றால் கிருஷ்ணரைச் சரணடைந்தவர் என்று பொருள்."

> “ இவையெல்லாம் பிரபுபாதா பிற்காலத்தில் உலகம் முழுவதும் கிருஷ்ண பக்தி பற்றி பிரச்சாரம் செய்வதற்கு முன்னுதாரணமாய் அமைந்தன. ”


எல்லாம் சென்று தேரில் வரும் ஜகன்னாதருக்கு நல்ல பிரசாதங்கள் செய்து வரவேற்க வேண்டும் என்று ஏற்பாடு பண்ணினார். அபய் நடத்திய இந்த தேரோட்டம் உலகப் புகழ்பெற்ற ஒரிசா புரி ஜென்னாதர் ரதயாத்திரையை நினைவுபடுத்தியது.

கிருஷ்ணரிடம் பிரார்த்தனை செய்தல், கிருஷ்ணருக்கு உணவு நைவேத்யம் செய்தல், பஜனை செய்தல் இப்படியாக அபயின் இளமைப் பருவம் பக்தியுடன் இணைந்திருந்தது.

## கல்லூரி பருவம்

கல்லூரி படிப்பின் போது சுதந்திர போராட்டத்தில் நாட்டம் உடையவராக இருந்தார் அபய்.

மூன்றாம் வருட படிப்பின் போது ''ராதாராணி தத்தா'' என்ற பெண்ணை அபயுக்கு திருமணம் செய்து வைத்தார் அவரது தந்தை.



டிபார்ட்மென்ட் மேனேஜராக அபய். (பிரபுபாதா)

## டிபார்ட்மென்ட் மேனேஜராக

கல்லூரி படிப்பிற்கு பின் அபய், கல்கத்தாவிலுள்ள மிகப்பெரிய மருந்து லேபரட்டரியில் டிபார்ட்மென்ட் மேனஜராக பணிபுரிந்தார்.

இங்கு தான் அபயின் வாழ்வில் ஓர் ஆன்மீக திருப்பு முனை ஏற்பட்டது.

ஆம். ஓர் உயர்ந்த ஆச்சார்யரை சந்திக்கும் வாய்ப்பு அபயுக்கு கிட்டியது.

## அபய் சந்தித்த ஆன்மீக குரு – "பக்தி சித்தாந்தா"



1922-ல் மருந்து தொழிலில் பிரபலமாகி கொண்டிருந்தார் அபய்.

அப்போது அவரது நண்பர் அபய்-யை 'ஸ்ரீலபக்தி சித்தாந்தா சரஸ்வதி தாகூர்' என்ற பெயருடைய ஆச்சார்யரை சந்திக்க அழைத்துச் சென்றார்.

இவர்கள் இருவரையும் பார்த்த 'பக்தி சித்தாந்தா', "நீங்கள் எல்லாம் படித்த பையன்கள்தானே. சைதன்ய மஹாபிரபுவின் போதனைகளை (கிருஷ்ணரின் உபதேசங்களை) உலகெங்கும் எடுத்துச் சொல்லி ஏன்பிரசாரம் செய்யக் கூடாது?" என்று கேட்டார்.

"நமது நாடு அடிமைப்பட்டிருக்கும் போது கிருஷ்ண பக்தியை பற்றி யார் கேட்கப் போகிறார்கள். முதலில் நாம் சுதந்திர நாடாக வேண்டும். என்று கேட்டார் அபய்.

இதற்கு ஸ்ரீல பக்தி சித்தாந்தா, "கிருஷ்ண உணர்வு இந்திய அரசியல் மாற்றத்திற்காக காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. கிருஷ்ண உணர்வு யார் ஆள்கிறார்கள் என்பதை நம்பியும் இல்லை. கிருஷ்ண உணர்வு மிக மிக முக்கியமான ஒன்று. அதைத் தள்ளிப்போடுவது என்பது கூடவே கூடாது. " என்றார்.

எடுத்த எடுப்பிலேயே கிருஷ்ண பக்தி அவசியமானது என்றும், அதை மற்றவர்களுக்கு எடுத்துக் கொடுக்க வேணடும் என்று ஆணித்தரமாக பக்தி சித்தாந்தா கூறியது அபயின்

> "இவர் தான் தனது வாழ்க்கையை மாற்றப் போகும் மஹான் என்பதை அபய் (பிரபுபாதா) அப்போது அறியவில்லை."

> “இந்தியா முழுவதும் கொதித்துக் கொண்டிருந்த நேரம் அது. எல்லோரும் அபயைப் போலவே நாட்டின் அரசியல் சுதந்திரம் தான் முக்கியம் என்று சொல்லிக் கொண்டிருந்த நேரம் அது. பெரியதலைவர்களும் புண்ணிய புருஷர்களும் ஏன் காந்தியும் கூட பக்தி சித்தாந்தாவிடம் அபய் கேட்ட கேள்வியைத் தான் கேட்டிருப்பார்கள்.”

மனதில் அதன் அவசியத்தை ஆழமாக பதித்து விட்டது.

அப்போதே அபய், ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதியை தான் சந்தித்த அற்புதமான குருவாக கருதினார். பிறகு 1922 முதல் 1933 வரை கிருஷ்ண பக்தியை எடுத்து வழங்குவதற்கு பற்பல பக்தி சேவைகளை செய்தார்.

அபயின் ஆர்வத்தை பார்த்த, ஸ்ரீல பக்தி சித்தாந்தா 1933ல் ‘அபய் சரணர விந்த’ என்ற ஆன்மீக பெயர் அளித்து அபய்-யை தனது சீடனாக ஏற்றுக் கொண்டார்.


1936ல் பக்தி சித்தாந்தா மறைவதற்கு முன் அபய் அவருக்கு ஓர் கடிதம் எழுதினார். அதில், ‘‘ஒரு குடும்பஸ்தர் என்ற முறையில் தன்னால் தன்னுடைய குருவுக்கு தகுந்த முறையில் சேவகம் செய்ய முடியவில்லை. இந்நிலையில் தான் செய்ய வேண்டியது என்ன? எனக்கென்று ஏதேனும் சேவை தர இருக்கிறீர்களா?’’ என்று கேட்டிருந்தார்.

இந்த கடிதத்திற்கு 2 வாரம் கழித்து பக்தி சித்தாந்தாவிடம் இருந்து பதில் வந்தது.

‘‘வங்காளம், இந்தி தெரியாத மக்களிடையே கிருஷ்ண பக்தி தத்துவங்களை ஆங்கிலத்தில் உன்னால் விளக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கிறது. இப்படி செய்வதனால் உனக்கும் நன்மை, உன்னிடமிருந்து கேட்பவர்களுக்கும் நன்மை. ஆங்கிலத்தில் ஸ்ரீகிருஷ்ணரின் போதனைகளை பிரசாரம் செய்வதில் நீ வல்லவனாய் திகழ்வாய் என்பதில் எனக்கு சந்தேகமே இல்லை’’ என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதைப் படித்த அபய், ‘‘கிருஷ்ண பக்தியை உலகம் முழுவதும் மக்களுக்கு எடுத்து வழங்க வேண்டும்’’ என்ற தனது குருவின் கட்டளையை தன் வாழ்வின், உயிரும் மூச்சுமாக ஏற்றுக் கொண்டார்.

# சோதனைக் காலங்கள்



அகில உலக அளவில் 'இஸ்கான்' எனும் கிருஷ்ண பக்தி மையத்தினை நிறுவுவதற்கு முன் ஸ்ரீலபிரபுபாதா பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.இதற்காக அவர் ஓர் பெரிய போராட்டமே செய்ய வேண்டியிருந்தது.

1937ம் ஆண்டில் தனது குருவின் மறைவிற்கு பின்னர், அபய் கிருஷ்ண பக்தியை எப்படியாவது மற்றவர்களுக்கு எடுத்துக் கொடுக்க வேண்டும் என்று போராடினார்.

1944ல் கிருஷ்ண பக்தி பற்றிய Back to Godhead என்ற பத்திரிகையை துவக்கினார்.

தானே எழுதுபவராகவும், டைப் செய்பவராகவும், சரிபார்ப்பவராகவும், விநியோகம் செய்பவராகவும் இருந்தார்.

பத்திரிக்கை அச்சானவுடன் அதனை விநியோகம் செய்வதற்காக டில்லி தெருக்களில் கடுங்குளிரிலும், கொதிக்கும் வெயிலிலும் நடந்திருக்கிறார்.

ஒரு சமயம் 114 டிகிரி வெயிலிலும் பத்திரிக்கையை விற்பதற்காக சென்ற போது வெயில் தாங்காமல் தெருவில் மயங்கி விழுந்து விட்டார். நல்ல வேளையாக அவருக்கு தெரிந்த ஒருவர் பார்த்து தனது காரில் அவரை ஏற்றிக் கொண்டு டாக்டரிடம் கூட்டிப் போனார்.

மற்றொரு சமயம் மாடு முட்டி தள்ளி விட்டது. கேட்பார் எவருமின்றி எவ்வளவோ நேரம் சாலையிலே கிடந்தார்.

அச்சகத்தை நடத்துபவர் கூட அவரிடம் , ''ஸ்வாமிஜி, இவ்வளவு கஷ்டப்பட்டு இந்த பத்திரிகையை வெளியிட

> “ கிருஷ்ண பக்தி பத்திரிக்கையை விநியோகிப்பதற்காக **புது டில்லியில் வெயில் 114 டிகிரியைத் தொட்ட நாட்களிலும் கூட விடாமல் சென்று விடுவார் அபய்.**

**“ ஜான்சியில் கிருஷ்ண பக்தியை பிரசாரம் செய்வதற்காக 'லீக் ஆப் டிவோடீஸ்' என்ற பெயரில் அபய் நடத்திக் கொண்டிருந்த கோயில் கட்டிடத்தை, கவர்னரின் மனைவி லேடீஸ் கிளப்புக்காக தேவைப்படுகிறது என்று சொல்லி எடுத்துக் கொண்டு விட்டார். ”**

வேண்டுமா?'' என்று கேட்டார்.

இப்படி ஒருபக்கம் எழுத்துப் பணியை தொடர்ந்த வண்ணம் இன்னொரு பக்கம் இவற்றிற்கு அடித்தளம் அமைக்கும் வண்ணம் 1952ல் ஒரு வாய்ப்பு கிடைத்தது.

நண்பர் ஒருவர் உத்திர பிரதேசத்திலுள்ள ஜான்சியில் பிரச்சாரம் செய்ய உதவினார். அபயின் ஆன்மீக உரைகளை கேட்ட நிறைய பேர் ஆர்வமாயிருந்தனர்.

எப்படியோ கஷ்டப்பட்டு கால் வைத்து விட்டார் அபய். கிருஷ்ண பக்தி நன்கு பரவத் தொடங்கியது. உரை வழங்குவதற்காக ஒரு கட்டிடமும் அபய்க்கு கிடைத்து விட்டது.

ஆனால் திடீரென்று, ஒருநாள் கவர்னரின் மனைவி, லேடீஸ் கிளப்பிற்காக தேவைப்படுகிறது என்று அந்த இடத்தை எடுத்து கொண்டு விட்டார்.

கவலையுடன் கல்கத்தா திரும்பிய அபய்க்கு இந்த காலங்கள் அவரது வாழ்வின் சோதனைக் காலங்கள் போல் இருந்தது.

ஒருபக்கம் எவ்வளவோ எடுத்துக் கூறியும் அவரது மனைவி கிருஷ்ண பக்தியில் ஆர்வம் இன்றி இருந்தார். ஒரு முறை டீ, பிஸ்கட்டுகள் சாப்பிடுவதற்காக ஸ்ரீமத் பாகவத புத்தகங்களை கூட பழைய பேப்பர்காரரரிடம் போட்டு விட்டார் அபயின் மனைவி.

மிகவும் வருந்திய அபய் வீட்டை துறந்து, கிருஷ்ணர் பிறந்து வளர்ந்த இடமான விருந்தாவனத்திற்கு சென்றார்.

இங்கு இருந்தவாறு ஸ்ரீமத் பாகவதத்திற்கு ஆங்கிலத்தில் உரை எழுத ஆரம்பித்தார்.

பின் 1959ல் ''அபய் சரணார விந்த பக்திவேதாந்த ஸ்வாமி'' என்ற பெயருடன் சந்நியாசம் மேற்கொண்டார்.

இப்போது ஸ்வாமிஜி, கடல் தாண்டி பிரச்சாரம் செய்ய

# கடல் தாண்டிய பயணம்



தனது தள்ளாத வயதில் மூட்டை முடிச்சுகளை மட்டுமே சுமந்து செல்லும் ஜலதூதா சரக்கு கப்பலில், காவியுடை காற்றில் படபடக்க, இடை இடையே ஹார்ட் அட்டாக்குடன் பயணம் செய்து 1965ல் அமெரிக்காவிற்கு புறப்பட்ட சமயம் பிரபுபாதாவுக்கு வயதோ 69. அவரிடம் இருந்ததோ, ஒரு பெட்டி, ஒரு குடை வெறும் 40 ரூபாய்.

37 நாட்கள் கடல் தாண்டிய பயணத்திற்கு பின் நியூயார்க்கில் வந்திறங்கிய போது பிரபுபாதவிற்கு துணை யாரும் இல்லை.

தனக்கு முற்றிலும் புதிதான தேசத்தில் யாருடைய துணையுமின்றி, செல்வமின்றி, நண்பர்களின்றி, சீடர்களின்றி, தன் இளமையின்றி, நல்ல உடல் நலமின்றி ''ஹரே கிருஷ்ணா மந்திரத்தினை'' உலகெங்கும் எடுத்து வழங்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் வந்திறங்கினார் பிரபுபாதா.

“ தன் பல வருட அனுபவத்தில் அட்லாண்டிக் சமுத்திரம் இவ்வளவு அமைதியாக இருந்து பார்த்ததில்லை என்று கூறினார் ஜலதூதார கேப்டன் பாண்டியா.

அட்லாண்டிக் கடலின் அமைதிக்கு காரணம் கிருஷ்ணரின் அருள் தான் என்றார் பிரபுபாதா.

> “கிருஷ்ண பக்தியை, ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தினை உலகம் முழுவதும் மக்களுக்கு எடுத்து வழங்க வேண்டும்” என்ற தனது குருவின் கட்டளையை தன் வாழ்வின், உயிரும் மூச்சுமாக ஏற்றிருந்தார் பிரபுபாதா.

# அமெரிக்காவில் கிருஷ்ண பக்தி



அமெரிக்க மண்ணில் பாதம் பதித்த பக்தி வேதாந்த ஸ்வாமி, சுமார் ஒரு வருட காலம் தங்குவதற்கு நிலையான ஓர் இடம் கூட இல்லாமல் அங்கும் இங்குமாக கிருஷ்ண பக்தியை பிரச்சாரம் செய்தார். பல்வேறு பல்கலைக்கழங்கள் மற்றும் கல்லூரிகளில் கிருஷ்ண பக்தி சொற்பொழிவுகளை ஆற்றினார்.

பின், நியூயார்க் - டாம்ப்கின்ஸ் ஸ்கொயர் பார்க்கில் இவர் செய்த ஹரே கிருஷ்ண பஜனை அனைவரின் மனதையும் கவர்ந்தது. இதனைத் தொடர்ந்து பலரும் ஸ்வாமியை பார்க்க வந்தார்கள். பகவத்கீதை உரையையும் பஜனையையும் கேட்டார்கள். பின் அனைவரும் ஸ்வாமியுடன் சேர்ந்து ஹரே கிருஷ்ணா என்ற பாடினார்கள்.

## இஸ்கான் தோற்றம்

புதிதாக சேர்ந்தவர்கள் முதலில் தயக்கம் காட்டினாலும் போக போக ஸ்வாமியுடன் சேர்ந்து நான்றாக பாட ஆரம்பித்தார்கள். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஸ்வாமி பாட பாட தொபர்ந்து எல்லோரும் ‘ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண; கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே; ஹரே ராம ஹரே ராம; ராம ராம ஹரே ஹரே ’ என்று முழு மந்திரத்தினையும் கற்றுக் கொண்டனர்.

ஹிப்பிகள் என்று அழைக்கப்படுபவர்கள் கூட ஸ்வாமிஜியின் அன்பினாலும், ஹரே கிருஷ்ண மந்திரத்தின் சக்தியினாலும் அற்புதமாக மாறினர்.

இப்படியாக ஸ்வாமிஜி, கிருஷ்ண பக்தி இயக்கம் ஒன்று உதயமாக எல்லோர் இதயத்திலும் விதையிட்டார்.


# உலகமே வாழ ஓர் வீட்டை கட்டினார் – பிரபுபாதா

## முதன் முதலில் நியூயார்க்

1966 ஜூலை மாதம் (அமெரிக்கா வந்திறங்கி ஒரு வருடத்திற்கு பிறகு) நியூயார்க்கில் முதன் முதலாக இண்டர்நேசனல் சொசைட்டி பார் கிருஷ்ணா கான்சியஸ்னஸ் 'இஸ்கான்' என்ற கிருஷ்ண பக்தி மையத்தினை பக்தி வேதாந்த ஸ்வாமி (பிரபுபாதா) துவக்கினார்.

இஸ்கான் கோயிலை நிர்மாணித்த பின் மேலும் மேலும் ஏராளமானோர் பக்தி வேதாந்த ஸ்வாமியின் சீடர்களாயினர். கிருஷ்ண பக்தி நியூயார்க் நகரம் முழுவதும் தீவிரமாக பரவியது. கிருஷ்ண பக்தி புத்தகங்களை வெளியிடுவதற்காக அச்சு இயந்திரங்களும் வாங்கப்பட்டது.

நியூயார்க்கில் இப்போது இஸ்கானும், ஸ்வாமி பிரபுபாதாவின் ஹரே கிருஷ்ண




கீர்த்தனையும் பிரபலமான ஒன்றாகி விட்டது. பத்திரிகைகளிலும், டிவிகளிலும் இஸ்கான் செய்திகள் முக்கிய இடம் பெற்றன.

## சான்பிரான்ஸிஸ்கோ-வில் இஸ்கான்

நியூயார்க்கில் இஸ்கான்-க்கு கிடைத்த வெற்றி விரைவில் சான்பிரான்ஸிஸ்கோ-விலும் எதிரொலித்தது.

ஸ்வாமிஜி விமானத்தை விட்டு இறங்கி வரும் போது எல்லோரும் ஹரே கிருஷ்ண மந்திரத்தை பாடினால் அவர் மிகவும் சந்தோஷம் அடைவார் என்று அங்கிருந்த சீடர் முகுந்தா மற்றவர்களுக்கு இங்கு

> “ பேரன், பேத்திகளுடன் விளையாடி ஈசி சேரில் உட்கார்ந்து ஓய்வெடுக்கும் வயதில் தான் பிரபுபாதா இவ்வுளவு தூரம் சிரமப்பட்டார்! ”

**“ இச்சமயம் தான் ஸ்வாமியை சீடர்கள் அன்புடன் 'பிரபுபாதா'' என்று அழைக்கத் தொடங்கினர். ”**

நினைவுபடுத்தினார். உடனே அனைவரும்சேர்ந்து ஹரே கிருஷ்ண மந்திரத்தை பாட ஆரம்பித்து விட்டனர். விமான நிலையித்திலிருந்து இறங்கிய மற்ற பயணிகள் இவர்கள் பாடுவதை பார்த்து ஒரு கணம் மலைத்து


ISKCON, Belgium

போனார்கள்.

அன்று டெலிவிஷனில் 11 மணி செய்தியில் ஸ்வாமியின் ஸான்பிரான்ஸிஸ்கோ வருகையை காண்பித்தார்கள்.

## போஸ்டன்-ல் இஸ்கான்

பின் ஸ்வாமிஜி, போஸ்டனில் இஸ்கான்-ஐ துவக்கினார். இங்கும் பலத்த வரவேற்பு கிடைத்தது.

சீடர்களும் பலர் தங்கள் வாழ்வை பிரபுபாதாவின் கிருஷ்ண பக்தி இயக்கத்திற்காக அர்ப்பணித்தனர்.

## முதன் முறையாக பிரபுபாதா- என்று அழைக்கத் தொடங்கினர்

இந்த கிளையில் தான் முதன் முதலில் ஸ்வாமிஜியை ''பிரபுபாதா'' என்று சீடர்கள் அன்புடன் அழைக்க ஆரம்பித்தனர்.

இதற்கான பொருளையும் அந்த மாதாந்திரத்திற்கான இஸ்கான் பத்திரிக்கையிலும் வெளியிட்டனர்.

‘பிரபுபாதா’ - என்றால் ''எப்போதும் கிருஷ்ணரின் பாத கமலங்களில் சேவை செய்து கொண்டிருப்பவர்'' என்று பொருள்படும்.

## ஐரோப்பா-வில் இஸ்கான்

பிரபுபாதாவின ஆசீர்வாதத்திற்கு கீழ் அவரது சீடர்கள் இஸ்கான் கோயிலை லண்டனில் நிர்மாணித்தனர்.

## ஐரோப்பா-வில் இஸ்கான்

பிரதிஷ்டை செய்யப்பட்ட ராதாகிருஷ்ணர் விக்ரஹங்களுக்கு பிரபுபாதா, "ராதா லண்டனேஸ்வரர்" என்ற பெயர் சூட்டினார். அதாவது லண்டன் மாநகரத்தின் மன்னர் என்று கிருஷ்ணரை புகழ்ந்தார்.

இங்கு தான் **பிரபல பீட்டில்ஸ் குழுவைச் சேர்ந்த ஜார்ஜ் ஹாரிசன் ஹரே கிருஷ்ண பக்தரானார்.**

இவர் மூலம் ஆப்பிள் ரெக்கார்ட்ஸ் கம்பெனி ஹரே கிருஷ்ண மந்திர இசைத் தட்டுகள் வெளியிட்டன. அந்த இசைத்தட்டு லண்டன் மட்டுமல்லாது, ஐரோப்பா முழுவதிலும் ஹரே கிருஷ்ணா மந்திரத்தை அறிமுகப்படுத்தியது.

## இந்தியா- வில் இஸ்கான்

மேலை நாடுகளில் எல்லாம் கிருஷ்ண பக்தர்களை உருவாக்கிய பிரபுபாதா







அவர்கள் மூலம் இந்தியாவிற்கு வந்து இந்தியாவிலும் பல இஸ்கான் கோயில்களை உருவாக்கினார்.

இங்கு அவர் இஸ்கான் கோயில்களை கட்டுவதற்கும், பக்தர்களை உருவாக்குவதற்கும் கடுமையான சிரமங்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

நீண்ட போராட்டங்களுக்கு பிறகு பம்பாய்-ஜூஹு கடற்கரையிலும், கல்கத்தா-மாயாப்பூரிலும், டெல்லி-விருந்தாவனத்திலும் இஸ்கான்

> "கிருஷ்ணர் என்றால் யார் என்று கூட தெரியாத மக்கள் வசிக்கும் அமெரிக்காவில் கூட இஸ்கான் கோயிலை கட்ட இவ்வளவு கஷ்டப்படவில்லை பிரபுபாதா. ஆனால் இந்தியாவிலோ கடும் சிரமங்களுக்குள்ளானார்."

> "நான் ஹரே கிருஷ்ண பக்தர்களை பார்த்த விதமே தனி. மற்றவர்கள் போல் அல்ல. எனக்கு நன்றாக தெரியும். அவர்களுடைய இயக்கம் இலேசாக எடுத்துக் கொள்ள கூடிய ஒன்று அல்ல. மற்ற எந்த இயக்கங்களிலும் இருப்பதை விட ஹரே கிருஷ்ணா இயக்கத்தில் எளிமையான வாழ்வும், கட்டுப்பாடுகளும் அதிகம்.
>
> – ஜார்ஜ் ஹாரிசன்."

கோயில்கள் பிரம்மாண்டமாக கட்டப்பட்டன.

இந்தியாவிலுள்ள எல்லா முக்கிய நகரங்களுக்கும் சென்று பிரபுபாதா, கிருஷ்ணரை பற்றியும் ஹரே கிருஷ்ண மந்திரம் பற்றியும் பிரச்சாரம் செய்தார்.

## உலகெங்கிலும் இஸ்கான்

இப்படியாக உலகெங்கிலும் ரஷ்யா, ஆப்ரிக்கா உட்பட அனைத்து இடங்களிலும் கிருஷ்ண பக்தியை வழங்கினார் பிரபுபாதா. 11 வருடங்களில் 14 முறை இவ்வுலகம் முழுவதும் பயணம் செய்து வந்து 108க்கும் மேற்பட்ட இஸ்கான் கோயில்களை நிர்மாணித்துள்ளார் பிரபுபாதா.










**இஸ்கான் உலகெங்கும் கோயில்கள், யோகா மையங்கள், ஆன்மீகக் கல்விக் கூடங்கள், கிராமப்புற கோயில்கள் உட்பட 600க்கும் மேற்பட்ட கிளைகளுடன் பல லட்சக்கணக்கான பக்தர்களுடன் இன்றும் வளர்ந்து வருகிறது**

# ஸ்ரீலபிரபுபாதா பற்றி உலகம் சொல்வது என்ன? இதோ இவர்கள் சொல்கிறார்கள் . . .

## இந்திய கலாச்சாரத்தின் ஆன்மீகத் தூதுவர்:

அவருடைய முயற்சி, மேலை நாட்டினருக்காக குறைத்து கொடுக்கப்பட்ட இந்து மதமல்ல. காலம் காலமாக உள்ள பராம்பரியத்தை அப்படியே எடுத்துக் கொடுத்தார். ரோமனிய அரசிற்கு பிறகு முதன் முறையாக இதோ ஒரு புதிய ஆசிய மதம் - எப்படி சொல்வது? மேற்கத்திய நாடுகளில் பெரும் பெரும் நகரங்களிலுள்ள மக்களால் கூட இவரது வழிகாட்டுதல்கள் கடைபிடிக்கப்படுகிறது.

- பேராசிரியர் ஏ.எல்.பாஷாம், ஆஸ்ட்ரேலிய நேசனல் பல்கலைக்கழகம், ஆஸ்திரேலியா.

## உலகம் முழுமைக்காக பாடுபட்டவர்:


இதற்கு முன் பல ஆன்மீகத் தலைவர்கள் இருந்திருக்கிறார்கள். மேலை நாட்டைச் சேர்ந்த ஒரு ஆன்மீகத் தலைவர், ''வாருங்கள்; என் சீடர்களாகுங்கள்'' என்று அழைத்தார். ஆனால் இந்த விஷயத்தில், இவர் வயதானவரும் கிடையாது; மேலை நாட்டினருக்கு பொருந்தாதவருமல்ல; மாறாக அவர் நன்கு பழகிய, வாழ்ந்த, வசித்த சொந்த சமூகத்திற்கு மட்டும் போராடினார்.

ஆனால் பக்தி வேதாந்த ஸ்வாமியின் சாதனையோ இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்ட ஒன்று. தனக்கு முற்றிலும் பழக்கமில்லாத தேசம். வயதோ எழுபது. இவற்றிற்கிடையில் பல வியத்தகு சாதனைகளை உலகம் முழுதும் தந்தார்.

-பேராசிரியர் தாமஸ் ஹாப்கின்ஸ், ஃபிரான்கிளின் அன்டு மார்சல் கல்லூரி, பென்சில்வேனியா. யுஎஸ்ஏ.

## எதற்கும் தலைசாய்க்காத சமூக சீர்திருத்தாளர்:

அர்த்தமற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த பலருக்கு, வாழ்வின் அர்த்தத்தை கொடுத்த அவருக்கு (பிரபுபாதா) நான் என்னுடைய மரியாதையை செலுத்துகின்றேன். சமூகத்தின் மேல் காழ்ப்புணர்ச்சி




## எளிமையால் கவர்ந்தவர்:

ஆன்மீகவாதிகள் பலர் தங்களை, 'நான் கடவுள் அவதாரம்' என்று அழைத்துக் கொள்கிறார்கள்.
ஆனால் பிரபுபாதாவோ அப்படிச் சொன்னதேயில்லை.
அவர் சொல்வதெல்லாம்
**'நான் கிருஷ்ணருடைய சேவகனுக்கு சேவகனுக்கு சேவகனுக்கு சேவகன்!'**
என்பது மட்டும் தான்.
இது எனக்கு மிகவும் பிடித்துள்ளது.
அவருடைய பணிவும் எளிமையும் என்னை மிகவும் கவர்ந்தன.

- ஜார்ஜ் ஹாரிசன், பீட்டில் பாடகர், லண்டன்.

கொண்டிருந்த பலரின் இதயத்தில் கடவுள் அன்பை மலரச் செய்தவர்.

-பேராசிரியர் ஸ்டில்சன் ஜுடா, பசிபிக் ஸ்கூல் ஆஃப் ரிலிஜியன், பெர்க்கிலி, கலிபோர்னியா.

## தலையாய சாதனைகளை செய்தவர்:

பிரபுபாதாவின் வாழ்வு, வெறும் தத்துவங்களையோ, வெறும் யோகாவையோ அல்லது தியானம் மட்டுமே இல்லாமல் உண்மையான மத அமைப்பாக விளங்குகிறது. 'கடவுளிடம் பக்தி' பற்றி அவர் சொல்லி தந்தது அவரது சாதனைகளிலேயே தலையாயது. அதனால் நான் பிரபுபாதா பற்றி கூறுவது என்னவென்றால், ''பிரபுபதா லட்சத்தில் ஒருவர் என்று கூறினால் அது குறையாகி விடும். அவர் எத்தனையோ கோடியில் ஒருவர் என்றால் மிகையாகாது''

- பேராசிரியர் ஹார்வி காக்ஸ், ஹார்வார்டு பல்கலைக்கழகம்

## வேத நெறிகளை யாருக்காகவும் மாற்றிக் கூறாதவர்:

'தவறான உறவு கூடாது'' என்று கொள்கை வகுப்பவர்கள் மேலை நாடுகளில் சீடர்களை உருவாக்க முடியாது. ஆனால் பிரபுபாதா தன்னுடைய செய்தியை மாற்றிக் கூறவே இல்லை.

ஒரு முறை ஒரு அமெரிக்க சீடர் பிரபுபாதாவிடம், 'காமம் என்பது குழந்தைகளை பெற்றுக் கொள்ளத் தான்' என்று நீங்கள் கூறுவதை அமெரிக்கர்கள் விரும்பவில்லை'' கூறினார்.

அதற்கு பிரபுபாதா, ''அமெரிக்கர்களை திருப்தி படுத்துவதற்காக, நான் தத்துவங்களை மாற்ற முடியாது'' என்று பதிலளித்தார்.

- சத்ஸ்வரூப தாஸ கோஸ்வாமி, ஆசிரியர், பிரபுபாதா பயோகிராபி.

# கிருஷ்ண பக்தர்களை உருவாக்கினார் !



ஸ்ரீல பிரபுபாதா செய்தவற்றுள் முக்கியமானது வெறும் கோயில்களும், புத்தகங்களும் மட்டுமல்ல.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒருபக்கம் இவற்றையெல்லாம் தாங்கி வழிநடத்தி செலுத்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களை உருவாக்கிச் சென்றார்.

## உலகத்திற்கான ஆன்மீக தூதுவர்

ஸ்ரீலபிரபுபாதாவின் ஒப்புயர்வற்ற சாதனைகளை கவுரவிக்கும் பொருட்டு நம் இந்திய அரசு "ஸ்ரீலபிரபுபாதா – உலகத்திற்கான ஆன்மீக தூதுவர்" என்று கூறி 1997ல் தபால் தலையை வெளியிட்டது.



# உண்மை ரோஜாவும், ஓவிய ரோஜாவும்

*- பிரபுபாதாவின் அறிவியல் பூர்வமான ஆன்மீக உரைகளிலிருந்து. ..*

இயற்கையின் செயல்களும், அற்புதங்களும் தானாக ஏற்படுவதில்லை.. அது பகவானாலேயே நடத்தப்படுகின்றன.

இதோ பாருங்கள். இந்த ரோஜா மலர் எத்தனை அழகுடையதாகவும் வாசனை உடையதாகவும், எழில் வடிவமுடையதாகவும் இருக்கின்றது. இதற்கு பின்னால், இயற்கையின் சட்டத்திற்கு பின்னால் கடவு ளின் உத்தரவு ஒன்று உள்ளது. அதனால் தான் இங்ஙனம் நடக்கிறது. ஆனால் விஞ்ஞானிகள் இது தானாக நடக்கிறது என்கின்றனர்.

அப்படியென்றால் ஒரு ஓவியக் கண்காட்சியில் 'ரோஜா' மலர் ஒன்று மிகவும் அருமையாக வரையப் பட்டுள்ளது என கொள்வோம். உடனே அதனை பார்ப்பவர்களுக்கு என்ன தோன்ற வேண்டும். இந்த படம்



இவ்விடத்தில் தானாகவே வந்துள்ளது என முடிவு செய்யலாமா? கூடாது.

இதற்கு பின்னால் ஓர் ஓவியரின் ரசனையும், படைப்பும் இருக்கிறதல்லவா?


மணமில்லாத, உண்மை வடிவமில்லாத ரோஜா படத்திற்கு ஓர் படைப்பாளி இருக்க வேண்டும் என்றால், அழகும், வடிவும் உடைய உண்மை ரோஜாவுக்கு பின்னால் ஏன் கடவுள் இருக்க கூடாது?

# மகிழ்ச்சி கிருஷ்ணரால் மட்டுமே சாத்தியம்

-செப். 28, 1972 அமெரிக்காவில் வழங்கிய உரையிலிருந்து

நாங்கள் ஒவ்வொருவரும் பல்வேறு பணிகளில் ஈடுபட்டுள்ளோம். ஒருவர் எழுதுகிறார். ஒருவர் அதனை டைப் செய்கிறார். வேறொருவர் புத்தகங்களை விநியோகம் செய்கிறார். மற்றவர் பிரசாதம் சமைக்கிறார். ஒருவர் சுத்தம் செய்கிறார். ஒருவர் சங்கீர்த்தனம் செய்கிறார். ஒரு நொடி கூட நாங்கள் சோம்பேறியாக இருப்பதில்லை. நாங்கள் கிருஷ்ணருக்காக உழைப்பதால் அந்த உழைப்பு எங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.


# மனம் திருந்தச் செய்த பிரபுபாதா புத்தகங்கள்



பிரபுபாதா தனது உணவு, உறக்கம், உடல்நிலை இவற்றை கருத்தில் கருதாது தினமும் ஒரு சில மணி நேரங்களே ஓய்வுவெடுத்தவாறு எழுத்துப் பணிக்காக கடும் சிரமம் மேற்கொண்டார். இப்புத்தகங்களினால் இன்று லட்சபோலட்சம் மக்கள், வேண்டாத பழக்கங்களிலிருந்து விலகி கிருஷ்ண உணர்வுடன் கூடிய பக்குவமான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

பகவத்கீதை உண்மையுருவில்
ஸ்ரீமத் பாகவதம் ( 10 காண்டங்கள்)
சைதன்ய சரிதாம்ருதம்
கிருஷ்ணா
தன்னையறியும் விஞ்ஞானம்
பகவான் ஸ்ரீ கபிலரின் யோகமுறை
குந்தி மகாராணியின் போதனைகள்
பக்தி ரஸாம்ருத சிந்து
உபதேசாமிருதம்
வேதம் வழங்கும் அறிவு
சவால்
பக்குவ நிலைக்கான வழி
உயிரிலிருந்து உயிர் தோன்றுகிறது
அறிவின் அரசன்
ஆன்மீக வாழ்க்கை
பக்குவமான கேள்விகளும்,
பக்குவமான பதில்களும்
மிக உன்னத யோகமுறை
ஈடு இணையற்ற வரம்
கீதாசாரம்
கிருஷ்ணர் - இன்பத்தின் இருப்பிடம்
அமைதியான வாழ்வுக்கு வழி
வினோதமான விண்வெளிப் பயணம்
இறப்பிற்கும், பிறப்பிற்கும் அப்பால்
கிருஷ்ணருக்கான வழியில்
யோகத்தில் பூரணத்துவம்

- மற்றும் பல



**ஸ்ரீல பிரபுபாதா எழுதிய புத்தகங்களை உலகம் முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்கள் அங்கீகரித்துள்ளன. குறிப்பாக இவர் உரை எழுதிய "பகவத் கீதை உண்மையுருவில்'' எனும் புத்தகம் உலகம் முழு வதும் எண்ணற்ற மக்களின் இதயத்தினை தூய்மை படுத்தி அவர்களது வாழ்வினை நல்வழிப் படுத்தியுள்ளது.**

# அனைத்தும் கிருஷ்ணருக்கே சொந்தம்!

ஸ்ரீலபிரபுபாதாவுடன் நடந்த ஓர் கலந்துரையாடலிருந்து. . .

ஒரு முறை ஸ்ரீலபிரபுபாதா கல்கத்தா அருகிலுள்ள மாயாப்பூர் இஸ்கான் கோயிலின் கட்டுமான பணிகளை மேற்பார்வையிட வந்திருந்தார்.

வழக்கம் போல் அன்று காலை தனது சீடர்களுடன் நடந்து சென்று கொண்டிருந்தார்.

அச்சமயம் சீடர்களில் ஒருவர் கல்கத்தாவின் மிகப்பெரிய தொழிலதிபர் ஒருவரை அழைத்து வந்து அறிமுகப்படுத்தி வைத்தார்.

ஸ்ரீலபிரபுபாதா அவரை அன்புடன் வரவேற்று உரையாற்றினார்.

பிரபுபாதா: ஹரே கிருஷ்ணா, இங்கு வந்ததற்கு நன்றி. தாங்கள் என்ன செய்கிறீர்கள்?

தொழிலதிபர்: நான் கண்ணாடி தொழிற்சாலை வைத்துள்ளேன்.

பி.பா: அப்படியா நீங்கள் கண்ணாடி எப்படி தயாரிக்கிறீர்கள்?

தொ.அ: மணலிலிருந்து தயாரிக்கிறேன்.

பி.பா: அந்த மணல் உங்களுக்கு எங்கிருந்து கிடைக்கிறது?

சற்று யோசித்த தொழிலதிபர் ஆன்மீகவாதியாக



இருந்ததால், ''மணல் பகவானிடம் இருந்து வருகிறது.'' என்றார்.

பி.பா: அப்படியென்றால் நீங்கள் பகவானிடம் இருந்து திருடுகிறீர்கள் அல்லவா?

(இதைக் கேட்ட தொழிலதிபரும், பக்தர்களும் சிரித்தனர்)

தொ.அ: பகவானிடம் இருந்து எடுத்தாலும், நான் பகவானுக்கு நன்கொடை அளிக்கின்றேன்

பி.பா: சரி. அப்ப நீங்க சிறிய திருடன்! (மேலும் சிரிப்பொலி தொடர்ந்தது)

இவ்வாறாக பிரபுபாதா அனைத்தும் கிருஷ்ணருக்கு சொந்தம் என்பதையும், அனைத்தும் கிருஷ்ணரிடமிருந்தே தோன்றுகிறது என்பதையும் தெளிவுபடுத்தினார்.

## தியானத்தில் சிறந்தது?

செப். 21 1973 - கலந்துரையாடல், பாம்பே.

செப்டம்பர் 21, 1973ல் மும்பையில் நடந்த கலந்துரையாடலில் இருந்து.

ஒரு பெண்: தியானத்தில் எதனை நீங்கள் சிபாரிசு செய்கிறீர்கள்?

பிரபுபாதா: மனதை கடவுளின் மேல் செலுத்துவது என்பது இந்த நவீன காலத்தில் மிகவும் கடினம் தான்.

மக்களின் மனம் மிகவும் சஞ்சலமாக உள்ளது.

எனவே இந்த காலத்தில் ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தை உச்சரிப்பதையே சிபாரிசு செய்கிறோம்.

இதில் எந்த விதமான சிரமமும் இல்லை.

வயதோ, மதமோ, மொழியோ இதற்கு தடையில்லை.

யார் ஒருவர் வேண்டுமானாலும், ''ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண; கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே; ஹரே ராம ஹரே ராம; ராம ராம ஹரே ஹரே'' என்ற இந்த மந்திரத்தை உச்சரிக்கலாம்.

இது சிறந்த தியானம்.

## செய்ய வேண்டிய மிக முக்கியமான காரியம்!

. . .உனக்கு நேரம் கிடைத்தால், நீ செய்ய வேண்டிய மிக முக்கியமான காரியம் - **"அதிகமாக ஹரே கிருஷ்ணா மந்திரத்தை உச்சரிப்பது தான்''** . ஏனென்றால் நம் வாழ்நாள் மிகவும் குறுகியது. மேலும் இந்த பிறவியிலேயே இந்த கிருஷ்ண பக்தியை முழுவதுமாக கடைபிடிக்க வேண்டும். நமக்கு எப்பொழுது இறப்பு நேரும் என்று சொல்ல முடியாது. அதனால் இறப்பு வரும் முன்னரே நம் கிருஷ்ண பக்தியை முழுமை செய்து கொள்ள வேண்டும்.

- அக்டோபர் 6, 1968ல் தனது சீடர் ஜெயபதாகாவிற்கு ஸ்ரீலபிரபுபாதா எழுதிய கடிதத்திலிருந்து . . .

## ISKCON Food For Life - இஸ்கான் ஃபுட் ஃபார் லைஃப்

# பிரபுபாதா ஏற்படுத்திய 'அன்னதான திட்டம்'

ஸ்ரீல பிரபுபாதா ஏற்படுத்திய ''இஸ்கான் அன்னதான திட்டம்'' இன்று உலகம் முழுவதும் பசியால் வாடும் மக்களுக்கு பேருதவியாக விளங்குகிறது.

அதுமட்டுமல்லாமல் வெள்ளம், பூகம்பம் போன்ற நேரங்களில் துரித வேகமாக செயல்பட்டு இஸ்கான் முன்னின்று வழங்கும் உணவுகள் பல நாட்டு மக்களின் இதயத்திலும் இடம்பிடித்து வருகிறது.

* * * *

1974ல் கல்கத்தா அருகில் உள்ள கிராமம் ஒன்றில் குழந்தைகள் பல குப்பை மேட்டில் இருந்த உணவுக்காக சண்டையிட்டு கொண்டிருந்தனர். இதனைக் கண்டு பெரும் அதிர்ச்சியடைந்தார் பிரபுபாதா. உடனே அவர் மறுபக்கம் திரும்பி தனது சீடர்களுக்கு கட்டளையிட்டார். ''இங்கே



பாருங்கள்! அவர்கள் எவ்வளவு பசியுடன் சிரமப்படுகிறார்கள். கிருஷ்ணர் அனைவருக்கும் தந்தை. எங்கெல்லாம் தந்தை இருக்கிறாரோ அங்கு குழந்தைகள் பசியுடன் இருக்கக் கூடாது''

''இஸ்கான் கோயில்களை சுற்றி 10 மைல்களுக்கு யாரும் பசியுடன் இருக்கக் கூடாது'' அதற்குண்டானதை செய்யுங்கள்''

என்றார் பிரபுபாதா.

* * *

''ஏழைகளுக்கு உணவு மற்றும் ஆன்மீக அறிவு அளிப்பதற்கு இஸ்கான் கோயில்கள் நல்லதொரு இணைப்பு பாலமாக இருக்க வேண்டும்''

''அரிசி மற்றும் பருப்பால் ஆன பிரசாத உணவை அனைவருக்கும் வழங்க வேண்டும் என்பதில் நான் மிகவும் அக்கறை செலுத்துகிறேன். '' - ஸ்ரீல பிரபுபாதா

# நடைமுறையில் பின்பற்றத்தக்கது, எளிமையானது

பிப்ரவரி-12, 1969, லாஸ் ஏஞ்சல்ஸ் ரேடியோ இன்டர்வியூவிலிருந்து ..

இண்டர்வியூயர்: எவ்வளவு காலமாக இங்கு உள்ளீர்கள்?

பிரபுபாதா: 1965, செப்டம்பரிலிருந்து.

இ.வி: ஓர் இயக்கத்தை ஆரம்பிப்பதற்காக வந்தீர்களா.

பி.பா: இல்லை. கிருஷ்ண பக்தியை கொடுப்பதற்காக வந்தேன். அதிர்ஷ்டவசமாக இங்கு இளைஞர்கள் பலர் ஒத்துழைப்பு தர இவ்வியக்கத்தை (இஸ்கான்) ஆரம்பித்தேன்.

இ.வி: உங்கள் இயக்கத்தில் திருமணம் தடைசெய்யப்பட்ட ஒன்றா?

பி.பா: இல்லை. முறையான குடும்ப வாழ்க்கை அனுமதிக்கப்படுகிறது. (பகவத்கீதையிலும் கிருஷ்ணர் இதனை அங்கீகரிக்கிறார்.)

இ.வி: உங்களை பின்பற்றுபவர்கள் போதைப் பொருள் உட்கொள்வார்களா?

பி.பா: இல்லை. இதைப் பற்றிய கேள்விக்கு இடமே இல்லை. காபி, டீ கூட சாப்பிடமாட்டார்கள் என்றால் மற்றவைகளை பற்றி சொல்ல



என்ன இருக்கிறது?

இ.வி: நீங்கள் சொல்வதை பார்த்தால் இது ஒரு மதக்கொள்கை போலத் தோன்றுகிறதே?

பி.பா: ஆனால் இந்த கட்டுப்பாடுகள் மதக்கொள்கைகள் அல்ல. இது தான் கலாச்சாரம். அதாவது இது ஒருவரின் உணர்வுக்கு தரும் பயிற்சியாகும். ஏனெனில் நாங்கள் ஒவ்வொருவரையும் நல்லதொரு உணர்வுக்கு கொண்டு வர முயற்சி செய்கிறோம்; இதற்கு கிருஷ்ண உணர்வு (கிருஷ்ணா கான்சியஸ்னஸ்) என்று பெயர்.

அதாவது, மேகத்திலிருந்த மழை பெய்யும் பொழுது அது தூயநீராகத் தான் வருகிறது;

> “ நாங்கள் செயற்கையாக முயற்சிப்பதில்லை. மாறாக, மந்திர தியானம் மூலம் இயற்கையாகவே தானாகவே மனம் அமைதிபட கற்றுத் தருகிறோம். ”

> “ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண; கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே; ஹரே ராம ஹரே ராம; ராம ராம ஹரே ஹரே” இந்த மந்திரத்தினை உச்சரித்து கேட்பதால் மனம் ஒருநிலை படுகிறது.

ஆனால் எப்போது அது பூமியைத் தொடுகிறதோ, அச்சமயம் அத்தூயநீர் உப்பாகவோ, கலப்படம் நிறைந்ததாகவோ மாறிவிடுகிறது. அதே போல ஒவ்வொருவரின் உண்மையான உணர்வு என்பது தூய்மையானதாகும். ஆனால் அது ஜட விஷயங்களுடன் தொடர்பு கொள்ளும் போது மாசுபடுகிறது.

எனவே நாங்கள் ஒவ்வொருவரின் உணர்வையும் தூய்மைப் படுத்த முயற்சி செய்கின்றோம். அப்படி அவர்கள் தூய்மை அடையும் போது அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றனர்.

இ.வி: நீங்கள் எப்படி தியானம் செய்ய கற்பிக்கிறீர்கள்?

பி.பா: செயற்கையான முறையில் மனதை கட்டுப் படுத்த நாங்கள் முயற்சிப் பதில்லை. மாறாக, மந்திர தியானம் மூலம் இயற்கையாகவே தானாகவே மனம் அமைதிபட கற்றுத் தருகிறோம். “ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண; கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே; ஹரே ராம ஹரே ராம; ராம ராம ஹரே ஹரே” இந்த மந்திரத்தினை உச்சரித்து கேட்பதால் மனம் ஒருநிலை படுகிறது. எனவே இது நடைமுறையில் பின்பற்றத் தக்கதும் எளிமையானதுமாகும்.

## துன்பங்களை வெல்லும் மந்திரம்

நான் உங்களிடம் வேண்டுவது என்னவென்றால், எந்த சூழ்நிலையிலும் ஹரே கிருஷ்ண மந்திரத்தை தொடர்ந்து சொல்லுங்கள். இவ்வுலகம் ஒவ்வொரு அடியிலும் ஆபத்து நிறைந்ததே. எப்படி கடலில் ஆபத்துக்கள் நிரம்பி இருக்கிறதோ, அது போல. ஆனால் கிருஷ்ணரின் பாதகமலங்கள் என்ற படகை சரணடைந்தோம் என்றால், ஆபத்துக்கள் நிறைந்த இப்பெருங் கடலானது , ஆபத்தில்லா சிறு பள்ளம் போன்றதாகி விடும்.

**இது போன்ற நூற்றுக்கணக்கான சிறு பள்ளங்களை ஹரே கிருஷ்ண மந்திரத்தினை உச்சரிப்பதனால் எளிதில் கடந்து விடலாம்.**

– விபத்திற்குள்ளான பிரபல எழுத்தாளர் திரு.ஆலன் கின்ஸ்பர்க்கிற்கு டிச. 21 , 1968ல் ஸ்ரீலபிரபுபாதா எழுதிய கடிதத்திலிருந்து . . .

# நீங்கள் என்ன மறந்தீர்களோ அதைச் சொல்லிக் கொடுக்க வந்துள்ளேன்

செப்டம்பர் 11, 1969

ஆப்பிள் ரெக்கார்ட்ஸ் லிமிடெட் மற்றும் லுப்தான்ஸா ஏர்லைன்ஸ் ஆகிய ஸ்தாபனங்களின் ஒத்துழைப்புடன் பக்தர்கள் பிரபுபாதாவிற்கு லண்டன் ஹூத்ரு விமான நிலையத்தில் பிரம்மாண்டமான வரவேற்புக்கு ஏற்பாடு செய்தனர். அச்சமயம் ஏராளமான பத்திரிகை நிருபர்களும் பிரபுபாதாவினை பேட்டி காண வந்திருநதனர்.

நிருபர்: இந்த வரவேற்பை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பிரபுபாதா: எனக்கு வரவேற்புகளில் அதிக நாட்டம் கிடையாது. நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுவதெல்லாம் என்னுடைய ஹரே கிருஷ்ணா இயக்கத்தை மக்கள் எப்படி வரவேற்கிறார்கள் என்பதைத் தான்.

நிருபர்: நீங்கள் என்ன சொல்லிக் கொடுக்க



நினைக்கிறீர்கள?


பிரபுபாதா: நீங்கள் எதை மறந்து விட்டீர்களோ அதைத் தான், சொல்லிக் கொடுக்க நினைக்கிறேன்.

நிருபர்: அது என்ன?

பிரபுபாதா: அது தான் கடவுள். துரதிர்ஷ்ட வசமாக நீங்கள் கடவுளை மறப்பதற்கு முயற்சி செய்கிறீர்கள். அதனால் வாழ்க்கையில் பலவிதமான துன்பங்களை நீங்கள் தழுவும்படி ஆகிறது. ஆகவே தான் நான், உங்களிடம் கிருஷ்ண பக்தி கொள்ளுங்கள்; சந்தோசமாயிருங்கள் என்பதை சொல்ல வந்துள்ளேன்.

# கிருஷ்ணரை புரிந்து கொள்வதால் நமக்கென்ன லாபம்?

12 செப். 1973- லண்டன் - பத்திரிகை நிருபர்களுடன் உரையாடல்



நிருபர்: பகவத்கீதையில் போதிக்கப்படும் மையக்க கருத்து என்ன?

பிரபுபாதா: பகவானைப் புரிந்து கொள்வதே மையக்கருத்தாம்.

நி.ப: கிருஷ்ணர் யார்?

பிரபுபாதா: கிருஷ்ணரே முழுமுதற்கடவுள். பரமபுருஷ பகவான்.

நி.ப: கிருஷ்ணரை புரிந்து கொள்வதால் நமக்கென்ன லாபம்?

பி.பா: இந்த வாழ்க்கை துன்பங்களிலிருந்து விடுபடலாம். அதுவே லாபம்.

நி.ப: நம்மிடம் எப்படி அவர் பேசுவார்?

பி.பா: பகவத்கீதையில் அந்த விபரம் உள்ளது.

நி.ப: உங்கள் பகவத்கீதையில் 'உண்மையுருவில' என்று ஏன் உள்ளது?

பி.பா: உண்மையுருவில். அதாவது உள்ளது உள்ளபடி யாம் கொடுத்துள்ளோம். ஏனெனில் கீதைக்கு பலரும் தங்கள் மனம் போன போக்கில் விளக்கவுரை எழுதியுள்ளனர். அதிலிருந்து வித்தியாசம் காணவே உண்மையுருவில் சேர்த்துள்ளோம்.

நி.ப: ஏன் ஹரே கிருஷ்ணா ஜபம் செய்ய வேண்டும்?

பி.பா: ஹரே கிருஷ்ண மந்திரம் உன்னதமான ஒலியதிர்வு. தெய்வீக சப்தம். இதை உச்சரிப்பதன் மூலம் ஒருவர் தூய்மை அடையலாம்.

நி.ப:கிருஷ்ண பக்தி என்றால்?

பி.பா: பகவத்கீதையை உள்ளது உள்ளபடி பின்பற்றுவதே கிருஷ்ண பக்தி.


நி.ப: நன்றி.

## ஜாதி, மதத்திற்கு தலை சாய்க்காதவர்

மிகத் தாழ்ந்த நிலையில் பிறந்திருந்தாலும் கூட ஒருவரது குணங்கள் பக்குவப்பட்டிருந்தால் மிகச் சிறந்த ஆச்சாரியர் நிலைக்கு வரமுடியும் என்பதை தான் நிறுவிய இஸ்கான் கோயில்கள் மூலம் நிரூபித்துக் காட்டினார். பிரபுபாதா.

ஜாதி, மத, இன வேறுபாடுகளுக்கு தலை சாய்க்காத பிரபுபாதா, எந்தக் குலத்தைச் சேரந்தவராக இருந்தாலும் ஒழுக்க நெறிகளை கடைபிடித்தால் உயர்ந்த நிலைக்கு வரமுடியும் என்பதை தனது சீடர்கள் மூலம் நிரூபித்துக் காட்டினார்.

ஒரு மருத்துவருடைய மகன் மருத்துவப் பட்டம் பெற்றாலன்றி பிறப்பினால் மருத்துவராக கருத



முடியாது. அதே போல் உயர்ந்த குலத்தில் பிறந்திருந்தும் தகாத செயல்களில் ஈடுபட்டால் அவர்களை உயர்நிலையினராக கருத முடியது என்று ஸ்ரீல பிரபுபாதா அடிக்கடி உதாரணம் காட்டுவார்.

> “ அமெரிக்கர்களும், ஆப்பிரிக்கர்களும், ஐரோப்பியர்களும் கூட இஸ்கான் கோயில்களில் சுவாமிக்கு பூஜை செய்கின்றனர். யக்ஞங்கள் வளர்க்கின்றனர். குணமும், செயலும் தான் முக்கியம்; பிறப்பல்ல என்பதை பிரபுபாதா நிரூபித்து காட்டினார். ”




## பிரபுபாதாவின் பிரிவு

1977-ம் ஆண்டு நவம்பர் 14

கடைசி வரை உயர்ந்த குணத்தோடும், பதட்டமில்லாமல் அறிவுரைகள் சொல்லிக் கொண்டும்; பக்தர்கள் பாடிய ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தை கேட்டுக்கொண்டே மிக மிக புனித இடமான விருந்தாவனத்தில் பிரபுபாதா தன் சரீரத்தை விட்டு கிருஷ்ணரின் திருவடி அடைந்தார்.

ஸ்ரீலபிரபுபாதாவுக்கும், அவர் தன்னுடன் கொண்டு வந்த புரட்சிகரமான கிருஷ்ண உணர்வு வாழ்வு முறைக்கும் அவருடைய மறைவு முற்றுப்புள்ளி வைக்க வில்லை என்பதற்கு இன்றும் வளர்ந்து வரும் கிருஷ்ண பக்தர்களும், இஸ்கான் கோயில்களுமே சாட்சி. கிருஷ்ண பக்தி இயக்கத்தை இன்னமும் அவர் தான் இயக்குகிறார்.... அவர் புத்தகங்களின் மூலம்... அவர் அறிவுரைகளின் மூலம்...

### ஸ்ரீலபிரபுபாதா நடந்த பாதையினை நாமும் பின் தொடர்வோம் .. .

**இ**ன்றளவும் உலகம் முழுவதும் ஏராளமான பக்தர்கள் தங்களுடைய வாழ்க்கையை பிரபுபாதாவிற்கு அர்ப்பணித்து முழுவதும் கிருஷ்ண பக்தி தொண்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

நம் மதுரை, திருநெல்வேலி, பெரியகுளம் இஸ்கான் கிளைகளில் விஞ்ஞானிகள், மருத்துவர்கள், பொறியாளர்கள் உட்பட பலரும் தங்கள் வாழ்வை அர்ப்பணித்து மக்களுக்கு கிருஷ்ண பக்தியை கொடுப்பதற்காக சேவை செய்கின்றனர்.

குடும்பஸ்தர்களும், தொழில் புரிபவர்களும், அரசு அலுவலர்களும், வணிகஸ்தர்களும், பேராசிரியர்களும், மாணவர்களும், தங்கள் நிலையில் இருந்தவாறு இஸ்கான் சேவைகளில் உறுதுணை புரிகின்றனர். மேலும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் மற்றும் ஏராளமான மாணவ-மாணவியர் ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தினை உச்சரித்து கிருஷ்ண பக்தியுடன் கூடிய வாழ்வில் அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும் வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரபுபாதா நடந்த பாதையினை நாமும் பின் தொடர்வோம்.

# ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
# கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
# ஹரே ராம ஹரே ராம
# ராம ராம ஹரே ஹரே



கிருஷ்ணரை மறந்து வாழ்வதே வாழ்வின் அனைத்து துன்பங்களுக்கும் காரணம். சண்டையும் சச்சரவும் நிறைந்த இந்த கலியுகத்தில் ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தினை உச்சரிப்பதை தவிர வேறு நற்கதி எதுவுமில்லை. 16 வார்த்தைகளை கொண்ட ஹரே கிருஷ்ண மஹாமந்திரம் கலியுகத்தின் தீமைகளை அழிக்கும் சர்வசக்தி படைத்தது.

– ஸ்ரீல பிரபுபாதா

ISKCON®

# International Society for Krishna Consciousness

Founder Acharya: His Divine Grace A.C.Bhaktivedanta Swami Prabhupada





## அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் (இஸ்கான்)

ஸ்தாபக ஆச்சாரியர் : தெய்வத்திரு.அ.ச.பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா

12/37,மணிநகரம் மெயின் ரோடு,
மதுரை-625 001.
**Ph: 0452 - 2346472**

10-B, திருவனந்தபுரம் ரோடு,
திருநெல்வேலி-627 002
**Ph: 0462 - 2501640**

**தினசரி பூஜை, யோகா:**

காலை 4.45
முதல் 12.30 வரை,
மாலை 4.45 முதல்
8.15 வரை

**ஞாயிறு சிறப்பு நிகழ்ச்சி:**

மாலை 6 முதல் இரவு 8 வரை
*சிறப்பு பூஜைகள் * நரசிம்ம
பிரார்த்தனை * மந்திர தியானம்
* பகவத்கீதை சிறப்புரை

---

*Iskcon Ulagam - Oor Kannottam Regd with RNI under no. TNTAM-1999/302. Owned by ISKCON-MADURAI and published by Shankhadhari Das from 12/37, Mani Nagaram Main Road, Madurai-625 001. Designed by: ISKCON Design Group, Madurai.* *All Krishna art and the works of Srila Prabhupada are© BBT International.*

# ஸ்ரீலபிரபுபாதாவின் சேவைகள் குறித்து . . .



**ம**திப்புமிக்க காரியத்தை பிரபுபாதா செய்துள்ளார் என்பதை உணர்கிறேன். பிரபுபாதாவின் புத்தகங்களை அரசாங்க நிறுவன நூலகங்கள் அனைத்தும் வாங்கினால் நன்மை பயக்கும்.

**– திரு.லால் பகதூர் சாஸ்திரி, முன்னாள் பிரதமர், இந்தியா.**

**ச**முதாயத்திற்கான அவரது அர்ப்பணிப்பு மற்றும் மனித நலம் பேணுதல் மிகவும் போற்றுதற்குரியது. அவருடைய நேருக்கு நேரான விஷயங்களை எடுத்துச் சொல்லும் முறை பாரத கலாச்சாரத்தையும் தத்துவத்தையும் ஏராளமானோர் ஆழமாக உணர்ந்து கொள்ளச் செய்துள்ளது. **– இந்திய அஞ்சல் துறை**

**உ**ள்ளது உள்ளபடி உண்மையை, தான் வாங்கியபடியே மற்றவர்களுக்கும் பரப்புபவராக இருக்க முடியும் என்பதற்கு ஸ்ரீலபிரபுபாதாவின் வாழ்க்கை ஒரு நல்ல உதாரணம்.

**– பேராசிரியர் ஹார்வி காக்ஸ், ஹார்வர்டு பல்கலைக்கழகம்**

**எ**ந்த லட்சியத்தை மற்றவர்கள் பின்பற்ற வேண்டும் என்று பிரபுபாதா நினைத்தாரோ, அதையே உருவாகக் கொண்டிருந்தது, அவரது வாழ்க்கை. எல்லாவற்றையும் விட சீடர்கள் அவர் மேல் இவ்வளவு அன்பையும், பக்தியையும் கொள்ளச் செய்த அவரது தனிப்பட்ட பண்புகள் கவனத்தில் கொள்ள வேண்டியதாகும்.

**– டாக்டர்.ஜே.ஸ்டில்சன் ஜூடா, பசிபிக் சமய பாடநிறுவனம்.**

---

ஸ்ரீலபிரபுபாதாவின் 'முழு வாழ்க்கை வரலாறு' புத்தகம்
இஸ்கான் கோயில்களில் கிடைக்கும். விபரங்களுக்கு அணுகவும்:

## இஸ்கான் – ஹரே கிருஷ்ணா கோயில்


12/37, மணிநகரம் மெயின் ரோடு, மதுரை-1. போன்: 0452-2346472

10-பி, திருவனந்தபுரம் ரோடு, திருநெல்வேலி. போன்: 0462-2501640


'ஸ்ரீல பிரபுபாதா' – கிருஷ்ணரின் மிகச் சிறந்த தூய பக்தர்


5th Print: 5000

Supplementary of "Iskcon Ulagam - Oor Kannottam" - *Regd no. TNTAM-1999/302.* - Mar' 2012